## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 94/2024**

திரு. குமணன் (P.W–2) **09.03.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. கிரைய ஒப்பந்த ஆவண விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வேலுச்சாமி சிமெண்ட் கடையில் தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது. யார் கேட்டுக் கொண்டதன் பெயரில் தாவா கிரைய ஒப்பந்த ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் வேலுச்சாமி கேட்டுக்கொண்டார் பிரதிவாதிகளுக்கும் அது தெரியும். கிரைய ஒப்பந்தத்தில் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் முத்தம்மாள், நித்தியானந்தம், உஷாராணி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்கள். கிரைய தொகை என்ன என்றால் 6 லட்சம். கிரைய கால விவரங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியும் 32 மாதங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.

2. கிரைய ஒப்பந்த ஆவணத்தில் எத்தனை சாட்சிகள் என்றால் இரண்டு சாட்சிகள். நான் எத்தனாவது சாட்சி என்றால் இரண்டாவது சாட்சி. முதலில் விசாரணை வாக்குமூலத்தில் என் முன்னிலையில் தான் கையொப்பம் செய்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்தை தற்போதைய தேதியில் உள்ள சந்தை மதிப்பிற்கு கிரயம் செய்து தர பிரதிவாதிகள் தயாராக உள்ளார்கள்

என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்த ஆவணத்தில் காலநீட்டிப்பு ஒப்பந்த ஆவணத்தில் கால நீடிப்பு செய்து கொண்ட விவரங்கள் தெரியுமா என்றால் சொன்னார்கள் நேரடியாக தெரியாது. வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.03.09 13:24:31 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.